மாற்றங்களேயும் செய்யக்கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருக்கிற காரணத்தினுல் அந்தச் செயற்குறிப்பை அரசாங்கம் நிறுத்தி வைத்திருக்கிறது.

திரு. என். வரதராஜன் : பேரூராட்சிகளே நகராட்சிகளாக மாற்றுகின்ற வகையில் தமிழ்நாட்டில் இதுவரையில் எத்தனே மாற்றப்பட்டிருக்கின்றன ? இதிலே தேர்தல் நடத்தப்படாத நகராட்சிகளுக்கும் புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கிற நகராட்சிகளுக்கும் எப்போது தேர்தல் நடத்த அரசு உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே 84 நகராட்சிகள் இருக்கின்றன. இந்த ஆண்டில் 6 புதிய நகராட்சிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 90 நகராட்சிகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர, ஆவடி, அம்பத்தூர், சுத்திவாக்கம், மாதவரம் போன்றவை நகராட்சித் திட்டத்தின்கீழ் டவுன்ஷிப்புகளாக அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சில நகராட்சிகளில் தேர்தல் முடிந்தும் சிலவற்றில் முடியாமலும் இருக்கின்றன. அவைகளில் சில, வழக்கு மன்றங்களில் இருக்கின்றன. அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டு வருகிறது.

THIRU T. MARTIN : May I know from the Hon. Minister the number of Special Officers whose names were sent by the Director of Rural Development in the list submitted by him to Government?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது பற்றிய விவரம் ஏதும் இல்லே. தனிக் கேள்வி போட்டால் தகவல் தரலாம்.

* 151 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலூக்கா குத்தாலம் மேஜர் பஞ்சாயத்தினே நகராட்சி மன்றமாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனேயில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லே.

திரு. என். கிட்டப்பா : தலேவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முந்தைய கேள்விக்குப் பதிலளிக்கையில் 30 பேரூராட்சிகளே நகராட்சிகளாக ஆக்குவதற்கு பரிசீலித்துக் கொண்டிருக்கிருேம் என்று தெரிவித்தார்கள். அந்த 30 பேரூராட்சிகளில் குத்தாலம் ஒன்ரு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலேவர் அவர்களே, ஏற்கனவே பதிலளிக்கையில் 30 பேரூராட்சிகளே நகராட்சிகளாக மாற்றுவதற்கான ஒரு செயற்குறிப்பு வந்ததாகவும், ஆனுல் அது மத்திய அரசு தடைசெய்த காரணத்தினுல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னேன். அந்த 30 பேரூராட்சிகளில் குத்தாலமும் இருக்கிறதா என்ற விவரம் இல்லே.